சுருக்கம்

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – முதுநிலை ஆசிரியர் பணியிடங்கள் – நேரடி மற்றும் பதவி உயர்வு மூலம் நியமனம் – கல்வித்தகுதிகள் – இணையாக கருதுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(மேநிக2)துறை

அரசாணை (நிலை) எண்.165

நாள்: 04.07.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043,
ஆனி 20

படிக்கப்பட்டவை:-

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.34524/W2/இ2/2010, நாள் 02.08.2011
2. சென்னை–6, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண்.1188/RND-F1/2012, நாள்.29.03.2012.

---------

ஆணை:-

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் வேதியியல் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களில் இளங்கலைப் பாடப்பிரிவில் வேதியியல் (B.Sc.,) பாடத்தினை முதன்மைப் பாடமாக பயின்று முதுகலைப் பாடப்பிரிவில் (M.Sc.,) முதன்மைப் பாடத்தினை பயிலாமல், சிறப்பு பிரிவில் உள்ள பாடங்களை படித்து பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும், எனவே, வேதியியல் பாடப்பிரிவில் முதுகலை சிறப்பு பாடப்பிரிவில் உள்ள M.Sc., Organic Chemistry, Inorganic Chemistry, Physical Chemistry, Industrial Chemistry மற்றும் Polymer Chemistry ஆகியவற்றை முதன்மை பாடத்திற்கு இணையானதாகக் கருதி நியமனம் மற்றும் பதவி உயர்வு வழங்க உரிய ஆணைகள் வெளியிடுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்கள், 27.03.2012 அன்று நடைபெற்ற 33வது இணைக்கல்வி தகுதிப் பரிசீலிப்பு குழுவின் (Equivalence Committee) கூட்டத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.2ல், M.Sc., யில் Analytical Chemistry (University of Madras), Organic Chemistry (Annamalai University), In-Organic Chemistry (Annamalai University) மற்றும் Physical Chemistry (Annamalai University) ஆகிய பாடப்பிரிவுகளில் பணிநாடுநர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதியானது பள்ளிக்கல்வித்துறையில் உள்ள

ஆசிரியர் பணியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட M.Sc., Chemistry கல்வித் தகுதிக்கு இணையானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

3. மேற்காணும் 27.03.2012 அன்று நடைபெற்ற 33வது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய இணைக்கல்வி தகுதிப் பரிசீலிப்பு குழுவின் தீர்மான எண்.2ல் உள்ள பரிந்துரையை ஏற்று, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள வேதியியல் முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் நேரடி நியமனம் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் நியமனம் வழங்க கீழ்க்கண்ட அட்டவணையில் கலம் 2-ல் குறிப்பிடப்பட்ட சிறப்பு பாடப்பிரிவான முதுகலைப் பட்டப்படிப்புகள் அதில் குறிப்பிடப்பட்ட பல்கலைகழகங்களில் பெற்ற முதுகலைப் பட்டங்கள் கலம் 3இல் குறிப்பிட்டுள்ள முதுகலை பாடத்திற்கு இணையானதாக கருதி ஆணை வெளியிடப்படுகிறது.

| SL.No.<br>1 | Name of the Subject<br>2 | To be considered as equivalent to<br>3 | Equivalent/ Not Equivalent<br>4 |
|---|---|---|---|
| 7 | M.Sc.,(Analytical Chemistry) University of Madras | M.Sc., Chemistry | Equivalent |
| 17 | M.Sc.,(Organic Chemistry) Annamalai University | M.Sc., Chemistry | Equivalent |
| 18 | M.Sc.,(In-Organic Chemistry) Annamalai University | M.Sc., Chemistry | Equivalent |
| 19 | M.Sc.,(Physical Chemistry), Annamalai University | M.Sc., Chemistry | Equivalent |

4. மேலே பத்தி-3ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணிக்கான சிறப்பு விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிட உரிய கருத்துருவை உடன் அனுப்புமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர் சென்னை-6.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,சென்னை-6.
தலைவர் ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி நகல்.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.